# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி: 044-29515580

<u>ஆணை நாள் 23.04.2025</u>

**<u>முன்னிலை</u>**

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

## <u>வழக்கு எண். CP 3142/B/2022</u>

திரு.சி.கமலையன் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்,
மண்டல துணை வட்டாட்சியர்
வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்
தென்காசி. -- பொது அதிகார அமைப்பு

<u>ஆணை</u>

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 13.08.2024 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொது தகவல் அலுவலர் / மண்டல துணை வட்டாட்சியர் அவர்கள் 25.10.2024 அன்று ஆஜராகி, பட்டா மாறுதல் செய்ய கால அவகாசம் கோரப்பட்ட பொது தகவல் அலுவலரின் கோரிக்கையினை இவ்வாணையம் ஏற்று, மனுதாரருக்கு தகவல்கள் வழங்கிவிட்டு அதன் விவரத்தினை, பொது தகவல் அலுவலர் / மண்டல துணை வட்டாட்சியர். தென்காசி அவர்கள், இவ்வாணையத்தில் **<u>18.02.2025</u>** அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து, பொது தகவல் அலுவலர் / மண்டல துணை வட்டாட்சியர் அவர்கள் 18.02.2025 அன்று ஆஜராகி, தென்காசி வருவாய் கோட்டாட்சியரின் 04.02.2025 தேதியிட்டு மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்ட மேலெழுத்தில், சென்னை நில நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கை ஆர்.7699212024 நாள்.27.08.2024ன்படி சர்கார் புறம்போக்கு கிராம நத்தம் இனங்களில் உரிமை கோர 1966 முதல் தொடர் ஆவணங்கள் இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், ஆனால் மனுதாரர் 1997ல் பதியப்பட்ட உயில் ஆவணம் சமர்ப்பித்துள்ளார் எனவும், அதற்கு முந்தைய ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை எனவும், எனவே, தென்காசி வட்டம், தெற்கு கடையம் கிராமம், நத்தம் சர்வே எண்.257 முதல் 264 ல் 0.15 சென்ட் நிலத்திற்கு 1966 முதல் தொடர் ஆவணங்கள் இல்லாததால் மனுதாரர் கோரிக்கையை தள்ளுபடி செய்து

உத்தரவிடப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகலை ஆணையத்தின் முன் தாக்கல் செய்ததின் அடிப்படையில், மேல் முறையீட்டாளருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆணையத்தின் ஆணையை நிறைவேற்றியதாகவும் கருதி மேற்கூறிய வழக்கு முடிவுற்றது.

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 3142/B/2022</u>**
பொதுத் தகவல் அலுவலர்,
மண்டல துணை வட்டாட்சியர்
வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்
தென்காசி.

**<u>மனுதாரர்</u>**
திரு.சி.கமலையன்
த/பெ.சின்னகுட்டி
2/57, ஜோதி இல்லம்,
புதுகிராமம்
தெற்கு கடையம்
கடையம் 627 415.

Copy to File
VPMA - 23/04/2025